செய்தி வெளியீடு எண் : 1152 நாள் : 11.07.2022

# செய்தி வெளியீடு

நாடு முழுவதும் ஜூலை 10–ம் நாள் தேசிய மீன்வளர்ப்போர் தினம் கொண்டாடப்படுகிறது. மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் திரு. அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் அவர்கள் தலைமையில் தமிழக அரசு சார்பில் மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை ஆணையர் அலுவலகத்தில் தேசிய மீன்வளர்ப்போர் தினம் இன்று 11.07.2022 கொண்டாடப்பட்டது. இந்நாளை முன்னிட்டு இணைய வழி கருத்தரங்கு நடத்தப்பட்டது. இக்கருத்தரங்கில் தொழில்நுட்ப வல்லுநர்கள் தீவிர முறையில் மீன்குஞ்சுகள் வளர்த்தெடுத்தல், மிதவை கூண்டுகளில் மீன் வளர்ப்பு மற்றும் நீர் மறுசுழற்சி முறையில் மீன் வளர்ப்பு போன்ற புதிய தொழில் நுட்பங்கள் குறித்து மீன் வளர்ப்போருக்கு விளக்கினர்.

இந்நிகழ்ச்சியில் மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறையின் ஆணையர், டாக்டர். கே.சு.பழனிசாமி இஆப., அவர்கள் துவக்கவுரை வழங்கி மீன் உற்பத்தி அதிகரித்திட அரசு செயல்படுத்தும் திட்டங்கள் குறித்து எடுத்துரைத்தார். மாண்புமிகு மீன்வளம் – மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் அவர்கள் மீன் உற்பத்தியினை அதிகரித்திடவும், புதிய தொழில்நுட்பங்களை பின்பற்றிடவும், இதற்கான அரசின் திட்டங்கள் குறித்து தலைமை உரையாற்றி, மீன் வளர்ப்போருடனும் கலந்துரையாடினார். இந்நிகழ்ச்சியில், கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், திரு.தெ.சு.ஜவஹர் இ.ஆ.ப. அவர்கள் மீன் வளர்ப்போரை ஊக்குவிக்க அரசு செயல்படுத்தும் திட்டங்கள் குறித்து சிறப்புரையாற்றினார்.

இந்நிகழ்வில் மாண்புமிகு மீன்வளம் – மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன் அவர்கள் தேசிய வேளாண்மை அபிவிருத்தி திட்டத்தின் கீழ் விரால் மீன் மற்றும் கூட்டு மீன் வளர்ப்பு மேற்கொள்ள மீன்வளர்ப்போருக்கு மானியம், பிரதம மந்திரி மீன்வள மேம்பாட்டு திட்டத்தின் கீழ் பயனாளிகளுக்கு குளிர் காப்பிடப்பட்ட வாகனம், மூன்று சக்கர வாகனம், இரு சக்கர வாகனம் மற்றும் தமிழ்நாடு மீனவர் நலவாரிய உறுப்பினர்களுக்கு பல்வேறு நிவாரண உதவிகள் போன்றவற்றை ரூ.18.32 இலட்சம் மதிப்பில் வழங்கினார். மேலும், பூண்டி நீர்தேக்கத்தில் மீன் உற்பத்தியை அதிகரித்திட, உள்நாட்டு மீனவ கூட்டுறவு சங்க உறுப்பினர்களுக்கு மீன்விரலிகள் மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் திரு. அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் அவர்களால் வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை அலுவலர்கள் மற்றும் பல்வேறு மாவட்டங்களிலிருந்து மீனவர்கள், மீன் வளர்ப்போர் மற்றும் மீனவ கூட்டுறவு சங்க பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**